செய்தி வெளியீடு எண்: 382/2017 நாள் : 30.06.2017

**வேலூர் மாவட்டத்தில் உள்ளாட்சி தேர்தல் வரைவு வாக்காளர் பட்டியலை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் வெளியிட்டார்!**

வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வேலூர் மாவட்டத்தில் உள்ளாட்சி தேர்தல் வரைவு வாக்காளர் பட்டியலை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் வெளியிட திட்ட இயக்குநர் ஊரக வளர்ச்சி முகமை திரு.பெரியசாமி அவர்கள் பெற்றுக்கொண்டார்.

வேலூர் மாவட்டத்தில் 1995ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகளின்(தேர்தல்கள்) விதிகளுக்கிணங்க சிற்றூராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சியின் அனைத்து வார்டுகளுக்கான வாக்காளர் பட்டியல் மற்றம் தமிழ்நாடு பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் (தேர்தல்) விதி, 2006-ன்படி பேரூராட்சி, நகராட்சி மற்றும் மாநகராட்சியின் அனைத்து வார்டுகளுக்கான புகைப்படத்துடன் வாக்காளர் பட்டியல் ஆகியவை தொடர்புடைய தமிழ்நாடு சட்டமன்ற தொகுதிக்கான வாக்காளர் பட்டியலில் அடங்கிய விவரங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டு அதன் நகல்கள் கீழ்குறிப்பிட்டவாறு வெளியிடப்பட்டுள்ளது.

ஊரகங்களைப் பொறுத்தவரையில் மாவட்ட ஆட்சியரகம், மாவட்ட ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் கிராம ஊராட்சி மன்ற அலுவலங்களிலும், நகரங்களைப் பொறுத்தவரையில் தொடர்புடைய அலுவலங்கள், மண்டல அலுவலங்களிலும், பொது மக்களின் பார்வைக்காக வெளியிடப்படவுள்ளது.

வேலூர் மாவட்டத்தைச் பொறுத்த வரையில் மொத்தம் 32,17,890 வாக்காளர்கள் உள்ளனர். இவற்றுடன் ஊரக பகுதிகளில் 20,09,048 பேரூராட்சிகளில் 1,87,414 நகராட்சிகளில் 6,05,199 மற்றும் மாநகராட்சிகளில் 4,16,229 வாக்காளர்கள் உள்ளனர்.

இந்த வாக்காளர் பட்டியலில் தனது பெயரைச் சேர்ப்பதற்கான விண்ணப்பமோ, அல்லது பதியப்பட்டுள்ள ஒரு பெயருக்கோ அல்லது அப்பட்டியலில் கண்ட விவரத்திற்கோ மறுப்புரை தர விரும்புவோர் தொடர்புடைய சட்டமன்றத் தொகுதி வாக்காளர் பதிவு அதிகாரியிடம் 1950-ம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் மற்றம் 1960-ம் ஆண்டு வாக்காளர் பதிவு விதிகளின்படி தக்க கோரிக்கையையோ மறுப்புரையையோ முதலில் தந்து, அதன் மூலம் தக்க மாற்றத்தை மேற்படி சட்டமன்றத் தொகுதி பட்டியலில் மேற்கொள்ள ஏற்பாடு செய்ய வேண்டும்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் (உள்ளாட்சி தேர்தல்) திருமதி.லதா, (ஊரக வளர்ச்சி) திரு.பிச்சாண்டி மற்றும் ஊரக வளர்ச்சி அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மாவட்ட தேர்தல் அலுவலர்/
மாவட்ட ஆட்சித்தலைவர்
வேலூர் மாவட்டம்

செ.ம.தொ.அ.
வேலூர்- 9. 30/6/17

30/6/17